உ

சிவமயம்.

இஃது

கலைமணி

யோஞாநந்த சுவாமிகள்

மு. ம. சுப்பையா தேசிகனுக்கு

அருளிச்செய்த

மனமோஹன மணி.

தஞ்சை:

லாலி எலெக்டிரிக் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1923.

உ

சிவமயம்.

இஃது

கஸமணி

யோஹாநந்த சுவாமிகள்

ரு. ம. சுப்பையா தேசிகனுக்கு

அருளிச்செய்த

மனமோஹன மணி.

தஞ்சை :

லாலி எலெக்டிரிக் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பெற்றது.

1923.

கடவுள் வணக்கம்.

வெண்பா.

காயமிருக்கக் கருத்தொன்றை யெனக்கருளும்
வேயாக்கவலை யுள்ளுருகித்—தோயாமல்
பாயுங்கருவி தொண்ணூத்தி ஆறதினால்
காயாமற் காத்தருளுன் கடனே.

குருவுபதேசம்.

ஆசிரியப்பா.

கதிர்முனை சுழியில் நின்றும்
மதியொளி கலையைக்கொண்டும்
பதியெனும் யெண்சாண்தேகம்
பண்புடன் காக்கவேண்டி
திதியெனும் மாய்கை யகற்றி
அறிவெனும் அருளால்ப் பார்க்க
கலைமக ளென்னும் பெண்ணால்
கருத்தெலாம் அறிந்துக்கொள்வீர்.

பொருள் மூன்று.

நம்மிடத்தில் மூன்று நெருப்பு இருக்கின்றது. அதாவது மூலாக்னியென்ற நெருப்புவொன்று, சந்திராக்னியென்ற நெருப்புவொன்று, சூரியாக்னி யென்ற நெருப்புவொன்று ஆக மூன்று நெருப்பும் நம்முடைய தேகத்தையாளுகின்றது.

இந்த மூன்று நெருப்பையும் அணைந்துபோகாமல் நாம் கெட்டிபண்ணிக்கொண்டால் நம்முடைய தேகம் அழியாது.

மூன்று நெருப்பும் வொன்றுசேர்ந்தால்தான் அணைந்து போகாது. தனித்தனி, இருந்தால் அணைந்துபோகும். மூன்றும் வொன்று சேர்ந்தால் முக்தியடைந்தான். முக்தி

யடைந்த தேகம் மண்ணில் வைத்தாலும் அழிந்துபோகாது; நெருப்பில் வைத்துக்கொளுத்தினலும் அழிந்துபோகாது; தண்ணியில் தள்ளிவிட்டாலும் அழிந்துபோகாது. முக்தி யடையாத தேகம் யெந்த மதத்திலுள்ள தானலும் அழிந்து தான் போகும்.

மூலாக்னி யென்பது மூலாதாரத்தில் இருக்கின்றது. சந்திராக்னியென்பது இடதுபக்கம் சந்திரகலை. சூரியாக்னி யென்பது வலதுபக்கம் சூரியகலை. இந்த மூன்று கனியையும் நாம் சாப்பிடவேண்டும்.

மனமோஹன மணி.

மனமோகன மணியென்ருல் ஒரு மநிதன் மோகனம் யென்னும் தன்னுடைய ஆசையைக்கொண்டும் தன் மனதைத் தன்வசப்படுத்துவாளுகில் அவன் இவ்வுலகில் சுப்ரமணி யென்னும் சோதியாக விளங்குவான்.

அவனுக்குத்தான் இந்தப் புஸ்தகத்தில் யெழுதியுள்ள ரகசியம் விளங்கும். இவ்விதம் விளங்கக்கூடிய மநிதன் இவ்வுலகின் கண் யெவ்விதம் வுற்பத்தியாகுவா னென்ருல்:-

அவன் பெற்ருேர்களாகிய தாய் தகப்பன் இருவரும் தநிதநி இருக்குங் காலத்தில் அவன் இல்லை;

இடையில் மாய்கை யென்னும் இருளானது சம்மந்தப்பட்டு அவன்தாய் தகப்பனை இணங்கச்செய்து அவன் கருத்தரிக்கின்ருன். அந்தக் கருவுக்கு,

நாலுவேதம் ஆறு சாஸ்திரம் பதினெண்புருணம் இருபத்தெட்டு ஆகமம் மூப்பத்தி இரண்டு மனுவிக்யானம் அறுபத்திநாலு கலைக்யானம் தொண்ணூத்தாறு தத்துவம் யென்ற மூலப்பொருள் துணையாகின்றது.

நாலுவேதம் யென்றால் நம்முடைய தாய் தகப்பன் மனம் ஒன்று, சந்திரகலை ஒன்று, சூரியகலை ஒன்று, இந்த மூன்றுக்கும் சக்தியைக் கொடுக்கக்கூடிய மூலாக்னி ஒன்று ஆக நாலும் வேதம் நாலுயென்று சொல்லவேண்டியது.

நம்முடைய தாய் தகப்பன் மனம் வொன்று சேராவிட்டால் அவர்கள் கலவி செய்யமுடியாது; அந்த கலவிக்கு சந்திரகலை சூரியகலை இல்லாவிட்டால் கருத்தரிப்பாடில்லை. மூலாக்னி இல்லாவிட்டால் அந்தக் கருவானது பிண்டமாகாது. இந்த நாலு வேதமும் வொன்றுசேர்ந்து கருத்தரித்து பிண்டமானதற்கு சாஸ்திரம் ஆறும் துணையாயிற்று.

ஆறு சாஸ்திரம் யென்றால் மண்ணு, தண்ணி, நெருப்பு, காத்து, ஆகாயம், பாதாளம் ஆக ஆறு ஸ்தானம் யென்று சொல்லவேண்டியது.

பாதாளத்தில் கணபதியும், மண்ணின் இடம் ப்ர்ம்மாவும், தண்ணியினிடம் விஷ்ணுவும், நெருப்பினிடம் ருத்ரனும், காத்தினிடம் மயேஸ்வரனும், ஆகாயத்தினிடம் சதாசிவனும் ஸ்த்தானம் பெற்றார்கள்.

இவர்களுக்கு அட்சரம்

ஓம், ந, ம, சி, வ, ய

இந்த ஆறும் வொன்று சேர்ந்தால் ஆறுமுகமும் ஒரு முகமானான்.

மேற்கண்ட ஆறு சாஸ்திரத்தையும் வோரிடத்தில் தெரிசிக்க வேண்டுமானால் குண்டலி சத்தியினிடம் தெரிசிக்கலாம்.

நம்மிடத்தில் தெரிசிக்க வேண்டுமானால் மூலாதாரம், அடிவயறு, தொப்புளு, நெஞ்சாங்குழி, தொண்டைக்குழி, புருவம் மத்தி, இந்த யிடங்களில் தெரிசிக்கலாம்.

பதினெண்புராணம் யென்றால் சாஸ்திரம்யென்ற ராகு, கேதுவினுடைய முகம் ஆறும் சந்திரன் ஒன்றும், சூரியன் வொன்றும், தசவாயுவு பத்தும் ஆகப் பதினெட்டும் புராண மாயிற்று.

சாஸ்த்திரம் ஆறுயென்ற ராகு கேது இல்லாவிட்டால் நாம் வுற்பத்தியுமில்லை; இந்த வுலகமுமில்லை. இதற்குச் சந்திரகலை, சூரியகலை யென்ற வெளிச்சமில்லாவிட்டால் நமக்கும் வெளிச்சமில்லை; இந்த வுலகத்திற்கும் வெளிச்சமில்லை.

சந்திரன் சூரியன் என்று சொல்லக்கூடியது யாதென்றால் ராகு கேதுவினுடைய வாயிலுள்ள நாகரெத்தனங்களாகும்.

ராகு, கேது தன்னுடைய ரெத்தனங்களை வாயில் வைத்து மூடிக்கொண்டால் உலகம் இருளடைந்துவிடுகின்றது. இருளைக் கிரஹணமென்றும் சொல்லுவார்கள்.

ராகு கேதுயென்ற ஆறும் சந்திரன் சூரியன் யென்ற இரண்டும் ஆக யெட்டும் வொன்றுசேர்ந்துவிட்டால் இந்த உலகமும் முக்தியடைந்துவிடும்; நாமும் முக்தியடைந்துவிடலாம். இதற்கு,

அட்சரம்

ராகு யென்பது = ஓங்காரம்
கேது யென்பது = பஞ்சாட்சரம்
சந்திரன் சூரியன் யென்பது = உகாரம்

ராகு கேது வொன்றுசேர்ந்தால் ஷடாட்சரமாகும்.
சந்திரன் சூரியன் வொன்றுசேர்ந்தால் உகாரமாகும்.

ஓங்காரம் பஞ்சாட்சரம் வொன்று
சேர்ந்தால் ஷடாஷ்சரமாகும்
இத்துடன் உகாரம்சேர்ந்தால்
அஷ்டாஷ்சரமாகும்

இதறகுச் சாட்சி யெட்டுகுடியில் ராகு கேது வொன்று சேர்ந்த ஆறுமுகம் யென்ற விக்ரஹம் வொன்றும் பக்கத்தில் வள்ளி, தெய்வானை யென்ற சந்திரன் சூரியன் இரண்டும் ஆக யெட்டும் அஷ்டாக்ஷரமாக நிற்தனம் செய்கின்றது பார்த்துக்கொள்ளலாம். அல்லது மஹாவிஷ்ணு சர்ப்பசயனம் யென்ற யிடத்தில் தெரிசிக்கலாம். தசவாயுவு பத்தும் மஹாவிஷ்ணு மார்பினிடம் சீவலிங்கமாகப் பாற்கலாம் மற்றும் சிவஸ்தலங்களில் தசவாயுவு வொன்று சேர்ந்து சீவலிங்கமென்று சொல்லக்கூடிய ஆவிடையாராகவும் பார்க்கலாம். தசவாயுவு பத்தும் இல்லாலாவிட்டால் இந்த வுலகமும் வொரு தொழிலும் நடத்தாது; நாமும் வொரு தொழிலும் செய்ய முடியாது.

ராகு, கேது, சந்திரன், சூரியன், தசவாயுவு ஆகப் பதினெட்டும் வொன்றுசேர்ந்து புராணம் பதினெட்டாயிற்று. இதற்குச் சாக்ஷி திருவாரூர் ஊற்ச்சோபன காலத்தில் தெரிசிக்கலாம்.

இருபத்தெட்டு ஆகமம் என்றால் ஓங்காரம் பஞ்சாக்ஷரம் ஆறும், சந்திரன் சூரியன் இரண்டும், தசவாயுவு பத்தும், தசவாயுக்களும் இருந்து தொழில் நடத்தக்கூடிய ஸ்த்தானங்கள் பத்தும், ஆக இருபத்தெட்டும் வொன்று சேர்ந்து ஆகமப்படி நாம் நம்முடைய தாய் வயற்றில் பிண்டோற்பத்தியாகிறோம்.

பிண்டத்தினிடமாக ஓங்காரம் யென்ற கணபதி மூலாதாரத்திலும், பஞ்சாக்ஷரம் யென்ற பிர்ம்மா அடிவயிற்றிலும், விஷ்ணு தொப்புளிலும், ருத்திரன் நெஞ்சாங்குழியிலும், மயேஸ்வரன் தொண்டைக்குழியிலும், சதாசிவம் நெற்றிக்கண்புருவ மத்தியிலும், உகாரம் யென்ற சந்திரன் சூரியன் உச்சந்தலையிலும் ஸ்த்தானம் பெற்றார்கள். இந்த யேழு ஸ்த்தானமும் சொற்கவாசல்கள் யென்று சொல்ல வேண்டும்.

தசவாயுவுக்கு ஸ்த்தானங்கள் யாதென்றால் கண் இரண்டு, காது இரண்டு, மூக்கு இரண்டு, வாய் வொன்று, அபானம் வொன்று, நீர் துவாரம் வொன்று, இந்திரியவாசல் வொன்று ஆகவாசல் பத்துக்கும் வாயுவு பத்தும் ஸ்த்தானம் பெற்றுக்கொண்டது. இந்தப் பத்துஸ்த்தானங்களும் நரஹவாசலாகும்.

இந்த தசவாயுக்களும் இல்லாவிட்டால் கண்கள் வுருளாது; வெளிச்சமுமில்லை; காதுகள் மந்தமாக இருக்கும்; மூக்குகள் சுவாசம் வராது; வாய்பேசாது ஊமையாக இருக்கும்; வலஞ்சலம் இந்திரியம் வெளியாகாது.

இந்த தசவாயுக்களையும் பிண்டத்தினிடமாக தெரிசிக்க முடியாவிட்டால் அண்டத்திநிடம் தெரிசிக்கலாம்.

அதெப்படி யென்றால் பாதாளலோகத்திலுள்ள மூலாக்னியிடம் வாயுவு இல்லாவிட்டால் மூலாக்னி மந்தமாயிருக்கும்; அண்டம் முழுமையும் தொழில் நடத்த சக்தியிராது.

பூமியினிடம் வாயுவு இல்லாவிட்டால் மலைகள் பெரிதாக வளராது, மரங்கள் பெருமனுகாது.

மேகமண்டலத்தில் வாயுவு இல்லாவிட்டால் மேகங்கள் வொரு பக்கமிருந்து மற்றொரு பக்கம் போகவும் முடியாது, இடி மின்னலுமில்லை, மழையுமில்லை. சூரியமண்டலத்தில் வாயுவு இல்லாவிட்டால் சூரியன் கிழக்கே இருந்து மேற்கே வரவும் முடியாது, மறுபடியும் கிழக்கே போகவும் முடியாது, அதற்குப் பிரகாசமுமில்லை.

சந்திரமண்டலத்தில் வாயுவு இல்லாவிட்டால் சந்திரன் கிழக்கே இருந்து மேற்கே வரவுமுடியாது, அதற்கு கலைகளும் பூரணமாகாது, அதனிடம் கெங்கையும் வுற்பத்தியாகாது.

நக்ஷத்திர மண்டலத்தில் வாயுவு இல்லாவிட்டால்

நக்ஷத்திரங்கள் கிழக்கே இருந்து மேற்கே வரவும் முடியாது, அதற்கு ஒளிவுமில்லை.

ஆகாயமண்டலத்தில் வாயுவு இல்லாவிட்டால் அமுர்த கலசம் பொங்கி வழியாது. பூமிக்கும் மோக்ஷமில்லை; நம்முடைய தேகத்திற்கும் முக்தி மோக்ஷமில்லை.

தண்ணியினிடம் வாயுவு இல்லாவிட்டால் வோட்டமிராது; நெருப்பினிடம் வாயுவு இல்லாவிட்டால் சுடலையாக சூழ்ந்து பற்றி யெரிய சக்தியிராது.

காத்தினிடம் வாயுவு இல்லாவிட்டால் நாலுபக்கத்திலும் சண்ட மாருதம் செய்து மரங்களையும் வீடுகளையும் விழ்ச்செய்ய முடியாது.

இவ்விதமாக நாலுவேதம் ஆறுசாஸ்திரம் பதினெண் புருணம் இருபத்தெட்டு ஆகமம் யென்ற ஆகமப்படி நம்முடைய தாய் வயற்றில் நாம் பிண்டோற்பத்தியாகிறோம். இது வரையிலும் பிண்டம் யென்று சொல்லலாமே தவிர மனுயென்று சொல்லமுடியாது.

முப்பத்தி இரண்டு மனுவிக்யானம் யென்றால் கணபதி, பிர்மா, விஷ்ணு, ருத்ரன், மயேஸ்வரன், சதாசிவம், சந்திரன், சூரியன், தசவாயுவு, தசவாயுவுக்கு ஸ்தானம் பத்து ஆக இருபத்தெட்டுங்கூடி கெற்பத்திலிருக்கும் பிண்டத்திற்கு பேச்சுமில்லை மூச்சுமில்லை யென்பது யாவருக்கும் தெரியும்.

யெந்தச்சமையம் பேச்சுமூச்சு வுண்டாகுமென்றால் பிண்டம் கெற்பத்தை விட்டு வெளியாகியவுடன் உச்சியின் வழியாகச் சென்று மூலாதாரத்தில் பார்வதியும் உண்ணாக்கில் சரஸ்வதியும் முகத்தில் லெட்சுமியும் சிரசில் கெங்கையும் ஸ்த்தானம் பெற்றுக்கொள்வார்கள். அதுசமையம் பிண்டத்திற்கு பேச்சுமூச்சு, கோபம், பசி, யாவற்றும் வுண்டாகும்.

இந்த நாலுபேர்களும் கூடியபிறகுதான் மனுயென்று சொல்லலாம். பார்வதி, சரஸ்வதி, லெக்ஷ்சுமி, கெங்கை, இந்த நான்கு சக்திகளையும் நாலு கலைகளென்றும் சொல்லுவார்கள்; நாலுவேதம் யென்றும் சொல்லுவார்கள். இந்த நான்கு முகத்தைக்கொண்டும் சுவாசம் உண்டாகின்றது.

அண்டபிண்ட சராசரம் உண்டாகியும் அழிந்தும் போகின்றது. பிர்ம்மத்திற்கு நான்கு முகமென்பார்கள். இந்த நான்கு பேர்களும் வொன்றுசேர்ந்தால் பிர்ம்மமாவார்கள்; நாமும் பிரம்மமாகலாம்.

இந்த நான்குபேர்களும் நம்மிடமிருந்து செய்யும் தொழில் யாதென்றால்:—

லெக்ஷ்சுமியானவள் முகத்திலிருந்துக்கொண்டு பிறரை மயங்கும்படியாகச் செய்தும் தேஜஸ் யென்னும் ஒளியையும் கொடுப்பாள்.

சரஸ்வதியானவள் உண்ணாக்கினிடமிருந்துக்கொண்டு இன்பமுள்ள வசனங்களை வசனிக்கும்படியும் இராகமுள்ள சுருதியென்னும் இருபத்தி இரண்டு கலைகளையும் வொன்று சேர்த்துப் பாடும்படியும் பிர்ம்மக்யானத்தையும் வுபதேசம் செய்வாள்.

கெங்கை யென்பவள் சிரசின் உச்சியினிடம் மிருந்துக் கொண்டு உமிழ் நீரென்னும் அமுர்தத்தைப் பொழிவாள்.

பார்வதியென்பவள் மூலாதாரத்தினிட மிருந்துக் கொண்டு தசவாயுக்களையும் தேகத்தையும் தாங்கிநிற்பாள்

ஆராதாரம் யென்ற கணபதி பிர்ம்மா, விஷ்ணு, ருத்ரன், மயேஸ்பரன், சதாசிவம், சந்திரன், சூரியன், பார்வதி, கெங்கை, சரஸ்வதி, லெக்ஷ்சுமி, ஆக சக்திகள் பனிரண்டும், தசவாயுவு யென்ற பத்தும், தசவாயுக்களும் இருக்கக்கூடிய ஸ்த்தானங்கள் பத்தும், ஆக முப்பத்தி இரண்டும் கூடியது மனுவிக்

யானம் யென்று சொல்லவேண்டும். நம் தேகத்திலுள்ள தசவாயுக்களிருக்கக்கூடிய ஸ்த்தானங்கள் பத்தையும் நீக்கினல் சக்திகள் பனிரெண்டும், தசவாயுவு பத்தும், ஆக இருபத்தி இரண்டும் சுருதிக்யானம் யென்று சொல்லவேண்டும்.

சுருதிக்யானம் யென்பது தொனியென்னும் ரீங்காரம் செய்யக்கூடிய வாசிகலைகள் பனிரண்டு; இதற்கு வுதவியாக நிற்கக்கூடிய சரவாயுவு பத்து; இந்த இருபத்தி இரண்டும் வித்வ சிரோன்மணிகளாகிய பாகவதாளுக்கு வேண்டியதாக இருக்கும்.

அறுபத்தி நாலு கலைக்யான மென்பது அமுர்தகலைகள் முப்பத்தி இரண்டும் யெண்ணும் பதினறுயென்ற சூரிய கலைபதினறும் மறைவாகி வெளியாகின்ற சந்திரகலை பதினறும் ஆகக்கலைகள் அருபத்திநாலாகும்.

அமுர்தகலைகள் யேறி யெறங்கக்கூடிய ஸ்த்தானங்களாவன வலதுபக்கம் கால், பெருவிரல், புரந்தாள், கணைக்கால், கெண்டைக்கால், முழந்தாள், பெருந்துடை, இடை, விலாப்புரம், கமழ்க்கட்டு, புஜம், கழுத்து, கன்னம், காது, கண், நெறிக்கட்டு, உச்சி, ஆகப் பதினறு ஸ்தானங்களிலும் வலதுபக்கமாக யேறி இடதுபக்கமாக யெறங்கக்கூடிய ஸ்த்தானங்கள் யாதென்றல்,

இடதுபக்கம், உச்சி, நெறிக்கட்டு, கண், காது, கன்னம், கழுத்து, புஜம், கமழ்க்கட்டு, விலாப்புரம், இடை, பெருந்துடை, முழந்தாள், கெண்டைக்கால், கணைக்கால், புரந்தாள், இடதுபச்கம், கால்பெருவிரல், ஆகப்பதினறு ஸ்தானங்களிலும் யெறங்கி நிற்கும்.

யேறக்கூடிய ஸ்த்தானம் பதினறு யெறங்கக்கூடிய ஸ்த்தானம் பதினறு ஆகஸ்த்தானம் முப்பத்தி இரண்டிலும் இந்த அமுர்தகலைகள் தேகத்தினிடம் யேறி யெறங்கா

விட்டால் தாய்வயற்றில் கருவானது உருவாகாது, பிண்டம் வெளியாகி செழிப்புடன் வளராது, வாலிபம், யௌவ்வனம், கௌம், மாறம், விருத்தம் யென்பதும் இல்லை.

மேற்கண்ட முப்பத்தி இரண்டு ஸ்தானங்களிலும் சந்திரகலைபதினாறும் சூரியகலைபதினாறும் அமுர்தகலையுடன் கலந்து பூரணமாகிவிட்டால் சோடசம் அருபத்தினாலும் இதுவே யாகும்.

அருபத்திநாலு திருவிளையாடல் யென்பதும் இதுவே யாகும்; அருபத்திநாலுகலைக்யானம் யென்பதும் இதுவே யாகும்.

தொண்ணூத்திஆறு தத்துவம் யென்பது மனுயென்ற தேகத்தினிடமாக கணபதி, பிர்ம்மா, விஷ்ணு, ருத்ரன், மயேஸ்வரன், சதாசிவம், சந்திரன், சூரியன், தசவாயுவு யென்ற பத்து தசவாயுக்களும் தொழில் நடத்தக்கூடிய ஸ்த்தானங்கள்பத்து சரஸ்வதி, லெக்ஷ்சுமி, பார்வதி, கெங்கை ஆக முப்பத்திஇரண்டையும் தன்வசப்படுத்தி சோடசகலையென்று சொல்லக்கூடிய அருபத்திநாலையும யெண்சாண் தேகத்தினிடம் பரிபூரணமாக பரவி நிற்கும்படி செய்து பார்த்தால் ரேசக, பூரக, கும்பகமென்னும் தொண்ணூத்திஆறு தத்துவாதிகளும் யெங்கும் பிரகாசமாகவும் சாட்சியாகவும் தன் தேகத்தினிடம் தோன்றும். எவன் ஒருவன் தன் மனதை தன்வசப்படுத்தி மனதை உலகத்தினிடமாக சஞ்சரிக்கச் செய்யாமல் தன் தேகத்தினிடமாக சஞ்சரிக்கச் செய்வானாகில் அவனுக்குத்தான் அருள்யென்பது பிரஹாசிக்கும்.

தொண்ணூத்திஆறு தத்துவாதிகளும் கூடிய தேகம் அழியாமல் இருக்கவேண்டியதற்கும் மனம் தேகத்தை விட்டு வெளியாகாமல் இருக்கவேண்டியதற்கும் மந்தரா விஷதம் யாதென்றால் சுவாசத்தை வொரு நாளொன்றுக்கு

வொரு கடிகைநேரம் வொவ்வொருநாளும் ஜாஸ்திசெய்து சாப்பிட்டு வந்தால் தேகசாந்தியாகும்.

இதற்குத் பத்தியம் நாம் நம்மை யறியாமல் யேதாவது குற்றம் செய்தாலும்சரி நாம் குற்றம் செய்யாமலிருந்தாலும்சரி பிறர் நம்மை யெவ்விதமாகத் திட்டினாலும் பதில்ப் பேசாமல் கண்ணை மூடிக்கொண்டு பிர்ம்மத்தைப்போல் மௌனம் சாதிக்கவேண்டும், கோபமேவரக்கூடாது, கோபம் உண்டானால் தபம் சித்திக்காது யென்பார்கள்.

சந்திராக்னி சூரியாக்னி மூலாக்னி மூன்று தீயும் ஒன்றுசேர்ந்து பராசத்தியாக வேண்டும்; தசவாயுக்களும் ஒன்றுசேர்ந்து சதாசிவமாகவேண்டும்.

கலிப்பா.

1. மூலக்கணபதியை மூன்றெழுத்தைத் தூக்கிவிட்டு
சாலவுமே நன்றாய்ச் சலிப்பறவே—காலமதில்
வேலவனை முன்னோக்கி வேண்டிநின்றால்
காலனுமே வாரான்கண்முன்னே.

உரை:—மூன்றெழுத்தாகவும் மூலாக்னியாகவும் மூலாதாரத்தில் அமர்ந்திருக்கின்ற கணபதியை இரவும் பகலும் மனஞ்சலிக்காமல் சந்தோஷமாக முப்பதாவது வயது முதல் ஆராதாரத்தை கடத்தி உச்சி வரையில் முட்டி நிற்கும்படி செய்தால் எமன் வந்து உயிரைக் கேழ்க்கான்.

2. ஐம்பத்தோரக்ஷரமாம் ஆறுதாரத்தினுள்ளே
பைம்பொற்சிவயோக வாசியினால்—ஸ்த்தம்பித்து
ஐந்தும் ஒன்றும் ஆறதாய், ஆருவதாமி...த்திற்
பந்து சென்று விளையாடும்பார்.

உரை:—அன்பத்தோரக்ஷரமாகவும் ஓங்காரம் பஞ்சாக்ஷரமென்னும் ஆறுதாரமாகவும் சொல்லக்கூடிய தேகத்தினுள்ளே வாசியை ஸ்த்தம்பமாக நிருத்திப் பார்த்தால் நெற்றிக்கண் புருவமத்தியில் ஐந்தையும் ஒன்றையும் பந்துபோல் விளையாடுவதை மனக்கண்ணால் தெரிசிக்கலாம்.

3. மூலக்குகையதனை மூச்சதனை முத்ததனை
காலத்துளியளவு கண்டுசென்றால்—காமன்கணை
காவிடுக்குப் புண்தனக்கு கரைந்துருகி நிற்காரே
சீலமுள்ள செல்வன்மகன்.

உரை:—உலகத்திலுள்ள சீமான்களுடைய பிள்ளைகள் மூலாதாரமாகிய குகையையும் அதனிடம் யெழுந்தருளும் சுவாசத்தையும் சுவாசத்தினிடம் வுற்பத்தியாகும் முத்து வொளிவையும் கண்டு மனம் அதனிடம் சென்றால் பூமியின்கண் வுற்பத்தியாகும் காமன் கணையெனும் தாசிகள்வீட்டிற்குச் செல்லவும் அவர்களைக்கண்டு மனம் கரைந்து வுருகிப்போகவும் மாட்டார்கள்.

4. உற்றார்களாயினுமே உறவின் முறைதான் சரியே
பெற்றோர்களாயினுமே பிரியாதாரில்லையே—ரவிமதி
சற்றாகிலும் கண்மூடி தனித்திருந்து பற்றினால் [யை
பழவினையும் பரந்தோடுமே.

உரை:—நம்மைப் பெற்றோர்களும் நம்முடைய உறவினர்களும் நம்முடைய சினேகிதர்களும் நம்முடைய தேகத்தினிடமாயுள்ள ஆத்துமா நீங்கினால் அவர்களும் நீங்கிப்போவர்கள். நம்முடைய ஆத்மா நம்மை விட்டும் நீங்குவதற்கு முன்பாக ரவிமதியென்னும் சந்திரகலை சூரியகலையை தனித்திருந்து கொஞ்சநேரமாவது கண்ணை மூடி மனம் பற்றினால் பழவினை யென்னும் ரஹமானது விலகி நிற்கும்.

5. கண்டால் கருத்தரியும் கண்டுகொண்டால் உருத்தெரியும்
செண்டுரெண்டுவீசி செழிப்புடனே—விருத்தியுடன்
கண்டாரும்உண்டே கருத்தரிந்து கதிர்மதியை
உண்டாரும் உண்டே உலகில்.

உரை:—முக்தியென்னும் மூலாக்னிசந்திராக்னி சூரியாக்னி மூன்றையும் மனம் கண்டுகொண்டால் அறிவென்னும் கருத்தானது சூட்சும தேகத்தோடும் பிரகாசிக்கும் சந்திரன் சூரியன் யென்ற புஷ்பச் செண்டு இரண்டையும் வாடிப்போகாமல் விருத்திசெய்து உச்சந்தலையில் வீசி கண்டவர்களும் உண்டு, அறிவைக்கொண்டு சந்திரகலை சூரியகலையை உள்ளுக்கு உண்டவர்களும் உலகில் உண்டு.

6. ஆனஉயிர் ஆனஉடல் அத்தனையும் மண்தின்றால்
யீனமுள்ள கைத்தொழிற்கள் யெத்தனையோ செய்வாய்
பார்தன்னிலே பரிதிமதி இரண்டினையும் [—தீரமுடன்
உருதியுடன் உட்கொள்வாய் நீ.

உரை:—ஈனமுள்ள கைத்தொழில்கள் யெவ்வளவோ செய்து கோடீஸ்பரனாக வாழுங்காலத்தில் யெமன் வந்து உயிரைக் கொண்டு போய்விட்டால் தேகமழிந்துபோகுமல்லவா? மனவைராக்கியத்துடன் உன் தேகத்தினிடமாயுள்ள சூரியாள் சந்திராள் இரண்டுபேரையும் உறுதியாக உள்ளுக்கு நீ சாப்பிடுவாயாக.

7. மூலச்சுழி மூன்றும் முச்சுடரை யொத்திருக்கும்
காலமுடன் கண்டுசென்றால்—சுழிமுனையில்
ஞாலமதில் மேதினியில் ஆலமுடன் விருதெடுத்து
நின்றாடும் மயிற்பாலம் காண்பார்.

உரை:—மூலாதாரத்தில் சுழி மூன்றும் முச்சுடராக வொன்று சேர்ந்திருக்கும். அதனிடம் மனம் சென்றால் யௌவனகாலத்தில் கண்டு தெரிசிக்கலாம். சுழிமுனையென்னும் நெற்றிக்கண்ணிடமாக வும் ஞாலமென்னும் வுலகத்தினிடமாகவும் மேதினியென்னும் தேகத் தினிடமாகவும் ஆங்காரத்தைக்கொண்டும் சந்திரனையும் சூரியனையும் கொடியாகப் பறக்கவிட்டு யோஹிகள் நிற்பார்கள். நரஹத்திற்கும் சொற்கத்திற்கும் போட்டிருக்கும் மயிற்பாலத்தையும் காண்பார்கள்.

8. வான்வாழும் தேவர்கணம் யான்வாழும்பூமிகணம்,
சாண்வாழும் சிவகணத்தின்—சந்நிதியை
நான்சாகா முன்னருள்வாய் யித்மகிழ்ந்து
காண்கரிய நந்தியனே காட்டும்.

உரை:—வான் ஆகாயம் யென்னும் நம்முடைய சிரசின்மேல் தேவகணங்களிருந்தும் நாம் அவர்களை தெரிசிக்காமல் நம் தேக மானது பூமிக்குப் பாரமாக இருக்கின்றதேயென்று மனம் வாடுகின் றேன். சாண்வாழும் சிரசினிடமாக வாழும் சிவகணங்களை தெரிசிக் கும்படியாக சந்நிதியை ஆராதார விதியை நான் சாகுமுன் சந்தோஷ மாகக் காட்டும். யாவர்களும் காண்பதற்கு அரிதாகிய நந்தியனே.

9. உற்றாரும் பெற்றாரும் செற்றால் வருவரோ
பற்றாதே பாழ்மனமே—யெற்றாலும்
கற்றறியா மூடரிடம் நற்கதையை நல்லறிவை
விற்றாலும் விற்காது காண்.

உரை:—நமக்குற்றவர்களும் பெற்றவர்களும் நாம் செத்துப் போனால் சொந்தமாக மாட்டார்கள். மனம் அவர்களிடம் செல்லா மல் ஆத்மாவினிடம் பற்றி முக்தியடையவேண்டும். அனேகம் சாஸ் திரங்களைக் கற்றும் அறிவில்லாத மூடர்களிடம் நற்கதைகளையும் அறிவுள்ள ஞானத்தையும் விற்க வேண்டுமானால் ஒரு காசள வேனும் குடுக்க மாட்டார்கள்.

10. நரைமாற்றும் பாற்குடத்தை நல்கும் கிருபையுடன்
குறைமாற்றும் குன்றே குணவடிவே--திரைமாற்றும்
கடலமுதைத்தந்தெனக்கு வுடல்முழுதும் வெண்ணீ
குடல் நாற்றமில்லாதுகூர். [ருய்

உரை :—நமக்குள் நரையென்னும் கோபத்தையும் திரையென்னும் ஆசையையும் குறைவென்னும் சாக்காட்டையும் மாற்றக்கூடிய நம் சிரசென்னும் குன்றினிடமாய் குணவடிவமுள்ள பாற்குடத்தில் அமர்ந்திருக்கின்ற அமுர்தத்தை யென் உடல் முழுதும் வெண்ணீராகும்படி தந்து குடல் நாற்றமில்லாமலிருக்கும் படியும் உபதேசம் செய்வீர்.

11. வேதாந்தியென்று வெளியாகிச்சென்றாலும்
வேழாண்டியென்று விரட்டுவார்—புவிமீதில்
காசாசைகொண்ட கதியரியா நிமூடர்
பாசவினைப் போகப்பகர்.

உரை :—யான் யோஹியென்று காவிவஸ்திரம் தரித்து உலகமெல்லாம் சுற்றித்திரிந்தாலும் யென்வயற்றுப்பசி வந்தகாலத்தில் புவியிலுள்ளோரை அன்னம் போடென்று கேட்டால் வேழாண்டியென்று யென்னை விரட்டுவார்கள். நற்கதியின் ரககியம் அரியாத யெந்தனுக்கு காசினுடைய ஆசையையும் பாசவினையையும் பசி போகத்தையும் விலகி நிற்கும்படி செய்குவீர்.

12. புல்லாகி நெல்லாகி புவியுளோர் தனைக்காக்கும்
வல்லானே வல்வினையைச்—சொல்வினையால்
நல்லானேயென்று நவிலும்படி யெனக்குச்
சொல்லாலோருண்மைசொல்.

உரை :—உலகத்திலுள்ள மனுக்கள் ஜீவன் செழிக்கவேண்டி புல்லினிடமாய் நெல்லை வுற்பத்தி செய்ய வல்லமை யுள்ளவனே வல்வினை யென்னும் மாய்கையை உன்னுடைய சொல்வினை யென்னும் உபதேசத்தால் அகற்றி உலகத்தார் யென்னை நல்லவன் யென்று சொல்லும் படியாய் வோருண்மை சொல்லும் யென் அய்யனே.

13. காட்டானை தின்னும் கனியை யெனக்களித்து
நாட்டார் நகைக்காமல் நல்வார்த்தை--யொன்றளிப்பாய்
வீட்டானை மேலேறி வீதிவலஞ்சுற்றிவரக்
கோட்டானை முடிமீதிலேற்று.

உரை :—காட்டானையென்னும் மாய்கையானது கனியென்னும் மூலாக்னியை தின்னுமல் யெனக்குச் சொந்தமாக அளித்து நாட்டார் இவன் செத்துப்போவான் யென்றுசொல்லி நகைக்காமல் நல்வார்த்தை யென்னும் சாஹாவரத்தைத் தருவாயாக. வீட்டானை யென்னும் தேகத்தினிடமாயுள்ள குண்டலி சத்தியை சிரசின் மேலேறி வீதிவலம் யிடம் சுற்றி வரும்படியாகச்செய்து கோட்டானை யென்னும் வாசிக்கோட்டை யென் உச்சந்தலையிலேற்று.

14. செந்தாழைமலரே செழித்திருக்கும் செம்பொன்னே
உன்றாளில் வீழ்ந்து உளமகிழ்ந்தேன்—மன மகிழ்ந்து
உன்றோளிலேற்றி உன்மைந்தனைக்கியெனை
தென்றேசமேகா துசெய்.

உரை :—செந்தாழை மலரின் மணமும் செம்பொன்னின் செழிப்புள்ள நிறமுமுடைய வுன்பாதத்தில் வுன்னடிமை நமஸ்காரம் செய்து உள்ளம் சந்தோஷித்தேன். உன்மனமகிழ்ந்து உன்றோளில் உன்மைந்தனைப்போல் தூக்கிவைத்துக்கொண்டு எமன் கையில் யென்னைக் காட்டிக் கொடுக்காமல் காப்பாற்றும் அன்னையே.

15. செல்வப்பெருக்கே செழுஞ்சுடரே மூன்றெழுத்தே
அல்லல்வினை யகற்றும் அருளானே—உன்னடியை
செல்ல வழிவிட்டருள்வாய் செம்பவளக்குன்றில்
நல்லதொரு பூங்கொடியை நாட்டு.

உரை :—செல்வமென்னும் மோக்ஷத்தையும் செழுஞ்சுடரென்னும் முக்தியையும் மூன்றெழுத்தென்னும் தேகத்தையும் யெனக்குச் சொந்தமாகச் செய்ய வல்லபமுள்ள அருளென்னும் சோதியே அல்லல் வினையை யகற்றும் அய்யனே உன்திருவடியை செம்பவளக்குன் றென்னும் உச்சிக்குழியில் செல்லும்படியாக வழியுண்டாக்கி வாசிஸ்தம்பத்தை நாட்டி சந்திராள் சூரியாள் யென்னும் புஷ்பத்தை கொடியாகப் பறக்கவிடுவீராக.

கலிப்பா.

16. திருவாரூர் வாழ்தியாகேசா நின்சரணம் வுன்னடிமை
அருவாயும் உருவாயும் அருள்சோமனுதயம்
கருவாய்க்குள் யெத்தாத கனிபுசித்தாற் பிறவிஇல்லை
மருவாய்ப்பிணியகற்றும் மருந்தாகும் ஆரூரான்.

உரை:—திருவென்னும் சந்திராக்னி சூரியாக்னி மூலாக்கினியும் ஆரூர் யென்னும் ஆருதாரங்களும் கூடிக்கேழ்கும் வரத்தை தியாகம் செய்யக்கூடிய யீசனே உன்னடிமை நமஸ்காரம். தேகமென்னும் உருவாகவும் ஆத்மாவென்னும் அரூபமாகவும் அருள் யென்னும் பிரகாசமாகவும் விளங்கும் அய்யனே கருவாய்யென்னும் மருவாய் யென்னு மாய்கையினிடம் அகப்படாத கனியைப் புசிக்கும் படியாகிய மருந்தைத்தாரும்.

நாலடிப்பா.

17. போற்றி திருவடிக்கே புநிதனும் தொண்டமான்
தோற்றியதோர் புற்றினிடம் மாற்றரியாம்--பொன்னை
மாற்றுரைத்த பிள்ளையார் மணவரையில் வீற்றிருக்க
காற்றிரமாய் நின்றாரே காண்.

உரை:—திருவடித்தொண்டனாகவும் புநிதனாகவும் அமைந்த கருணாகரத் தொண்டமான் யென்னும் குபேரன் புற்றினிடமாய்க் கண்ட. மாற்றரியாத. பொன்னை. கணபதியென்னும் மௌன. குருவானவர் மாற்றுரைத்துக் காண்பித்து. தானும் கெங்கை யிருக்கக்கூடிய. யிடத்திற்கு. காற்றிரமாக. மணவரைக்குள்ச் சென்றார் காண்டீர்.

18. அல்லியங்கோதாய் அருளளிக்கும் செந்தேனே
மல்லிகைமுல்லை மலரே யிதழ்விரியப்—பூத்தருள்வாய்
கொல்லும்யெமன் யென்னைக்கொல்லக்குருக்கிட்டால்
மல்லனிவனென்று சொல்லும் மாதே.

உரை:—அல்லிமலரைப் போலவும் அருள் அமுர்தம் யென்னும் செந்தேனைப் போலவும் உள்ள. அன்னையே. மல்லிகை மொக்கைப்போலவும் முல்லை மொக்கைப்போலவு முள்ள புஷ்ப்

பங்களை. யிதழ் விரியும்படியாகவும் புஷ்ப்பிக்கும்படியாகவும் செய்து எமன் உயிரைக் கேட்கவருங்காலத்தில் இவன் உனக்குமல்லன் உயிரைக் கொடுக்கமாட்டானென்று சொல்லும் மஹாதேவே.

19, கமலாசனத்திருக்கும் கமலாம்பா ளென்னு மங்கை
விமலருடதேவியாய் வீற்றிருக்கப்—பார்த்திருகண்
களிகூர்ந்து கலியகல வெளிவருவாய் கிருபையுடன்
யெளியேனின் றுயர் தீர்ப்பா யென்றும்.

உரை:—கமலாசனமென்னும் புஷ்ப்ப விமானத்தின் மத்தியில் கமலாப்பாளென்னும் மங்கையாகிய கெங்காதேவியை. விமலன் யென்னும் கணபதியின் தேவியாக வீற்றிருக்க யென் கண்பார்த்து மகிழ்ச்சியடைந்து மாய்கையகலவும் கிருபையுடன் தெரிசனம் தந்து. யெளியவன் துக்கத்தை நிவர்த்திப்பாய் யென் அன்னையே.

20. திருத்தோழன் திருவடியான் கருத்தரியாகண் மணி
[யின் கண்ணே
பருத்திருக்கும் வயற்றனே பவக்கடலை--மனக்கடலால்
அருள்த்தரித்த ஆநந்த அமுதுண்ணும் மரக்கலமாய்
பொருள்த்தரிக்கப் புத்திரனுய் வாரும்.

உரை:—மூன்றும் ஒன்றுக. சிநேகமுள்ள. திருவடியான் யென்னும் சிவனுடைய அரிவுக்கு அகப்படாத கண்மணியென்னும் கணபதியே: வுன் தாய்வயற்றைப் பெருத்திருக்கச் செய்தவனே யென் பாவமாகிய. சாகரத்தைக்கடத்தி மனதைக்கொண்டும் அருள்த் தரிக்கவும் ஆநந்தமாகவும் அமுர்த பானம் செய்யவும் வோர் கப்பலாய் வந்து. வுதவிசெய்து தேகத்தினிடமாயுள்ள பொருள்களை. யெனக்குச் சொந்தமாகும்படி புத்ரபாக்கியமாக. வாரும் கணபதி யென்னும் மூலாக்னியே.

21. சப்ரகூட மஞ்சத்திற் சயனித்திருக்கவும் நீர்
யெப்பொழுதும் வேண்டினேன்—இஷ்டமதாய்
கைலாய மேலேரி காக்ஷிதனை யெனக்களிக்கும்
மயிலேறும் பெருமாளே வாரீர்.

உரை :—கைலாயமென்னும் சிரசினிடமாக. சற்பாசனத்துடன் சயனித்திருக்கவும் இரவும் பகலும் இணைபிரியாமல் இஷ்டம் போல் காக்ஷியை யெனக்கு அளிக்கும்படியாகவும் மயிலின்மேல் யேரி வருவீர் யெம்பெருமானே.

22. சிவமுக்த்தன் செல்வன் சித்தன் செம்பொன்னடி கண் [டோன்
தவபக்த்தன் தாணிதனிலரிதாகும்—தண்மையுடன்
பவமுழூதும் குருமொழியால் அகற்ற வல்லான்
சிவகணம் போலிருப்பாரே காண்பீர்

உரை :—சீவ. முக்தியென்னும் சந்திராக்னி. சூரியாக்னி மூலாக்னி. மூன்றும். செம்பொன்னே. யொத்த திருவடியை. குன்றாத செல்வமாகப் பெற்றும் தவபக்தியால் குளிர்ந்த மனமுள்ள சித்தன் யென்பவனை. உலகத்தின்கண் தேடுதற்கரிதாக. யிருக்கும் அவன் தன் குரு மொழியைக் கொண்டும் தன் பாவமுழுமையும் அகற்றிக்யான. வல்லபனுகவும் சீவ கணங்களைப் போலவும் விளங்குவான் காண்பீர்.

23. ஜெகமுழுதும் மாய்கைதனை செய்துவைத்தாய் யுன் [கூற்றை
அகமுழூதும் பொய்யதனை அகற்றிவிட்டு--மெய்க்கூற் [றை
குகையதனில் நுழைந்திருந்து கூத்தாடும் [திருக்கூற்றை
பகைவரின்றி பாற்பாரை யோஹி.

உரை :—உலக. முழுமையும் மாய்கையை. வுற்பத்தி செய்துவைத்ததும் உன் கூற்றும் தேகமுழுமையும் பொய்யென்று சொல்லக்கூடிய. மாய்கையை. அகற்றி மெய்க்கூற்றெ. ன்னும் திருவடியையும் திருக்கூற்றையும் குகையென்னும் உச்சந்தலையில் மனதை நுழையும்படிசெய்து பகையில்லாமல் யோஹிகள் பாற்பார்கள்.

24. சிவசுப்பிரமணியனே சிந்தைமிக நொந்துருகி
அவையவங்களெல்லாம் அனல்மெழுகாய்—யாருமவர்
குரையகற்றும் வில்லானே குமரனே குருபரனே
திரைமரைவில் வீற்றிருப்ப தென்ன.

உரை :—சிவபக்தர்கள் மனமுருகி தேகமெல்லாம் அனலிற் காட்டிய. மெழுகைப்போல் ஆகும்படி செய்து சிவ. சுப்ரமணியனே. யென்று தபம் செய்பவர்களுடைய. குறையையகற்றும் வல்லானே. குமரவேள்வியே. மௌனகுருவே. யென்குறையை. அகற்றாமல் திரைமரையில் சயனித்திருப்ப தென்னவோ சொல்வீர்.

25. சிவ சிவாவென்றிருக்கும் தெருவீதி சுற்றிவரும்
சிவகணங்களெல்லாம் சிறந்திருக்கும்—நேற்றியதாய்
முழுத்தேங்காய் கொண்டுவந்து முன்னே யுடைத்து [வைத்து
பழுப்பேறு கற்பூர தீபமதேன்காண்.

உரை :—சிவகணங்களாகிய மனிதர்கள் சிவசிவா வென்றிருக்கும் விக்ரஹத்தை தெருவீதியைச் சுற்றிவரும்படியாகச் செய்து வீடுகள் தோரும் நேற்றியாகிய தேங்காயை வுடைத்து தாம்பாளத்தில் வைத்து பழுப்பேறுத கற்பூரத்தை கொளுத்திவைத்தும் விக்ரஹத்தின் முன்பாகக் காண்பிக்கும் காரணத்தையும் அதினிடமாயுள்ள ரகசியத்தையும் கண்டு கொள்வீர்களாகவும்.

26. வோயாதோ யென்கவலை யுள்ளுருக்கியா நந்தம்
பாயாதோ யென்மனந்தான் பாற்கடலிற்—றோயாதோ
சேயாக்கி யுன்மடியிற் வைத்திருத்திச் சீராட்டி
தாயாகக் கருணை வைத்துக்கார்.

உரை :—யென் மனக்கவலை தீர்ந்து உள்ளுருகி ஆநந்தம் உண்டாகி தேகமுழுமையும் பாயாதோ தாயாகவந்து குழந்தைப் பருவமாகச் செய்து வுன்மடியிற்றூக்கி வைத்து சந்தோஷமுண்டாகச் செய்து கருணைவைத்துக் காப்பாற்றும்யென் அன்னையே.

கலிநிலை.

27. தேசமெங்கும் சிறந்திருக்கும் தென்கயிலை நாட்டானின் [திருவடியை
வாசமுடன் மனமுவந்து கருத்தில் வைத்தாற்றிருத் [தணிகை
வேலவனும் வள்ளிபங்கன் குருவருளால் வீடளிப்பான்
காலனெனும் யெமபாசம் கலகலென விரைந்தோடும் [காண்பீர்.

உரை:—உலகமெங்கும் வழங்கும் தென்கயிலை நாட்டான் யென்னும் அகத்தீசன் திருவடியை சந்தோஷமாகவும் மனமுருதியாகவும் அரிவைச் செலுத்தியும் தபம் செய்தால் திருத்தணிகை யென்னும் நம் சிரசினிடமாக சொற்கவீட்டை குருவாகிய வள்ளி மணாளன் கட்டிக்கொடுப்பான் யெமபாசமானது ஓங்காரத்துடன் ஓடிப்போகும் காண்பீர்களாக.

28. குழைத்திட்டேன் கும்பிட்டேன் குனிந்தெழுந்து
[நிமர்ந்திட்டேன்
தழைத்திருக்கும் பச்சிலையை தானெடுத்து சாற்றி
[நின்றேன்
பிழைத்திருக்கும் வகையரியாய் பித்தெனெனு மென்
[றனையும்
அழைத்தருகில் வைத்திருத்தி அருளமுர்த மூட்டு
[மையா.

உரை:—குழைத்துப் போட்டுக்கொண்டும் கும்பிட்டும் நமஸ்காரம் செய்தும் கொழுந்துள்ள பச்சிலைகளைக் கிள்ளி சுவாமிக்கிச் சாத்தியும் மோக்ஷத்தைக் கண்டுக்கொள்ளாத பித்தனை அழைத்து அருகில் வைத்து மோக்ஷமென்னும் அருளையும் சொற்கத்திலுள்ள அமுர்தத்தையும் அடியேனுக்கு உளட்டிவைப்பாய் ஐயனே.

29. உடல்முழுதும் பீற்றலாம் வொன்பதுவாய் நாற்றமாம்
உடல்முழுதும் மேலழகாம் வுவற்கேணி நாற்றமதாம்
கடல்முழுதும் கப்பல்வைத்தும் கரை காணுமாய்கைய
[தாம்
சடலமெனும் பெண்ணுகி சநியனுமாய் வந்ததுவாம்.

உரை:—தசதுவாரமும் நாற்றமுமாகிய தேகத்தின்மேல் அழகு வாய்ந்த கன்னிகைப் பெண்களின் கற்பஸ்த்தானத்தின் ரகசியத்தை சப்தசாகரத்திலும் கப்பல்களைவைத்து தேடிப்பார்த்தாலும் மாய்கையானது. சனியனாகவந்து. மூடிகிற்குமாம் கரையை. க்காண, முடியாதாம் ரகசியமும் தெரிந்துகொள்ள. முடியாதாம்.

நாலடிப்பா.

30. கன்னிமுகம் பூத்திருக்கும் கன்னல்மொழி மாதவளாம்
கண்ணிமைக்கும் விற்புருவம் கன அழகாம்-வள்ளிதனை
பன்னிருகண் வேலவனும் பரிந்துநின்றான் கிழவனு
கன்னியவள் கும்பமதைக் காண்க. [மாய்

உரை:—செந்தாமரை புஷ்பத்தைப் போலுள்ள முகமும் கற்கண்டுப் பாகைப்போலுள்ள இனிய மொழிகளும் கண்களின் விற்புருவம் அழகுவாய்ந்தவளு மாகிய உலகமாதாவென்னும் வள்ளியினிடமாயுள்ள அமுர்தகலசமென்னும் கும்பத்தைத் தெரிசிக்கப் பன்னிருகண் வேலவனென்னும் ஆறு. தாரங்கள் கிழரூபமாகச் சென்று பணிந்து நின்றார்கள்.

31. நேற்றிருந்தார் இன்றில்லை காறறிருந்தார் பொருள் [முழுதும்
நேற்றியதாய் கணக்குடனும் வருக்குடனே--செருக்கு [முடன்
வீற்றிருந்தார் வினைவசத்தின் செயலரியா வீணரவர்
உயிர்போயின் பொருள்முழுதும் போச்சே.

உரை:—செருக்கும் செழிப்பும் வாய்ந்து பொருள்களைக் கணக்குடனும் வறுக்குடனும்வைத்து நேற்றியாகக் காற்றிருக்கும் சீமான்கள் வினையின் வழியையும் செயலையும் அரியாமல் வீண்காலம் போக்கியபடியால் அவர்கள் உயிர் போனவுடன் பொருளானது சொந்தமில்லாமலும் நேற்றிருந்தவர் இன்றைக்கு இல்லாமலும் போகின்றார்கள். இவையென்ன வெட்கமல்லவா. வீண் ஜெனனமல்லவா.

32. பாற்தருளும் பாவியெனை தீர்த்தருளும் வினையதனை
காற்தருளும் அடிமுடியைக் காண்பதற்குப்-பாற்முழு
பாற்க அரிதாகாமல் பண்புடனே யென்னுளத்தில்[தும்
தீற்கமுடன் தெரிசனையைத் தாரும்.

உரை:—பாவியின் முகத்தைப்பாற்து வினையைத்தீற்து காத தருளும் சுடிமுடியென்னும் மூலாதாரமுதல் ஆராதாரம் வரையில்

கடந்து மோக்ஷ வீட்டைப் பார்க்கவேண்டியதற்கு முழுதும் வழியைத் திரந்துவைப்பீர் உலகமுற்றிலும் தேடியும் காணமல் அரிதாகும்படி செய்யாமல் சந்தோஷமாக யென் உள்ளத்தில் சந்தேகமறத் தெரிசிக்கும்படி செய்வீர் யென் குருவே.

பிள்ளையார் யென்ற விக்கிரஹத்தினிடம் சத்திகள் ஒன்பது பேரையும் தெரிசிக்கவேண்டும் ஆவிடையாரென்ற லிங்கத்தினிடம் தசவாயுக்களையும் தெரிசிக்கவேண்டும்.

கலைக்யானக் கவி.

1. பால்மணக்கும் வாயால் பரிமளிக்கும் வாக்கதனை
தேன்மணக்கும் யின்பம் தருவாய்.

உரை :—அமுர்தம் பொங்கிவழியும் வாசமுள்ள. உன் திரு வாயினால் உண்டாகும் வாக்கை. தேன்மண. மாகவும் மதுர மாகவும் இன்பமாகவும் தாரும்.

2. நாளாகுமல்லால் நாமிருவர் கூடிநிற்க
வேளாளன் வித்தைத் தரி.

உரை :—இந்தத் தேகத்தினிடமாய் சந்திரகலை, சூரியகலை இரண்டும் வொன்றுகூடி நிற்க. நாள்ச்செல்லுமல்லவா வேளாள னென்னும் மாய்கையாகிய வித்தைத் தரித்துவிடுவாய்.

3. ஆக்கையெனும் பிரவி அறந்தாங்கி நிற்பதற்கு
வோற்க்கை யெனும் செய்கையுளதே.

உரை :—ஆக்கையென்னும் தேகம் முக்தி யடைவதற்கு சந்திர கலை சூரியகலை. மூலாக்கினி. மூன்றும் வொற்றுமைப் படவேண்டிய செய்கையுளதே.

4. அல்லல்வினையகற்ற வல்லாற்குச் சொல்வினை
வல்வினையும் மகன் றேயரும். [யின்

உரை:—அல்லல் வினையென்னும் ஆசையையகற்றும் வல்ல பற்குச் சொல்வினையாகிய. கோபமென்னும் வினையு மகன்று தூர நிற்கும்.

5. கட்டழகிப் பெண்ணணைய இஷ்டமிலற்
பொட்டழகிப் பெண்ணையுமே புணரார்.

உரை:—கட்டழகி யென்னும் மாய்கை, யை கல்யாணம் செய்து. மாயாசமுத்திரத்தைக்கடக்க வல்லபமில்லாதவர்கள் பொட்டகியென்னும் சொற்கப் பெண்ணையும் கல்யாணம் செய்ய முடியாதவர்களாகும்.

6. தழுவினர் நழுகார் வழியரியாமற்
வழுவினர் தொழுகாறரன்.

உரை:—தன் மனதைக்கொண்டும் மூலாக்கினியைத் தழுவி. நின்றவர்கள் தேகத்தை நழுகவிடமாட்டார்கள் வழி தெரியாமல் தேகம் நழுவிச் செற்றவர்கள் ஆத்மபூசை செய்யத்தெரியாமல் வழுவியவர்களாகும்.

7. புகழுடையோன் புண்ணியனும் புவியதநிற்
இகழுடையோ ன் யென்றைக்கு மிருள்.

உரை:—உலகத்தினிடமாக. தேக முக்தியடைந்தவன் புண்ணியாத்மாவென்றும் புகழுடன் விளங்குவான் தேக முக்தியடையாதவன் இருளடைந்த மனதுடையனாகவும் உலகம் இகழும் படியாகவும் இருப்பான்.

8. ஆருபேரில் அரியா வொருபேரைப்
பாரீரகமுழுதும் தேடி.

உரை:—ஆருதாரமாகிய. ஆறுபேரில் அரிய முடியாதவொரு பேருகிய மூலாக்கினியென்னும் கணபதியை தேக முழுவதும் தேடிபாற்து கண்டுகொண்டு முக்தியடையுங்கள்.

9. கெட்டவர் பட்டா திருட்டில ரொளியார்
சுட்டது வெல்லாம் சுடரே.

உரை:—கெட்டவன் யென்று சொல்லக்கூடிய யாவரும் பட்டுப்போன மரத்துக்குச் சமானமாகுவான். இருளடையாத மனமுள்ளவர்கள் யொளிக்காமல் பேசுவார்கள். மூலாக்னியைக்கொண்டும் தேகத்தைக் கொளுத்திக்கொள்வார்கள் சுடருகவுமிருப்பார்கள்.

10. ஆருரும் போரூரும் மற்றேரூரும்
நாலூரும் காணபாரணுவில்.

உரை:—ஆருதாரங்கள் முக்தியடையக்கூடிய இடத்தையும் மோக்ஷம் கிடைக்கக்கூடிய, கைலாயத்தையும் கைலாயத்திற்குப் போகக்கூடிய ரதத்தையும் திருவடியையும் வோரணுவுக்குள்ப்பார்த்து ஆனந்திப்பார்கள்.

11. பொருளுடையோர் புண்ணியம் செயினும்
அருளுடையோரை அறிதலரிது.

உரை:—ஒரு. நாளொன்றுக்கு ஆயிரம் பேருக்கு அன்னம் படைக்கும் பொருளுடையோர் அருளுடையோரைக்கண்டு, அன்னதானம் செய்யக்கூடியவர்கள் உலகத்தில் அரிதாக இருக்கும்.

12. யாரிருந்தென் யார்போய்யென்
பாரிற்றுணை யவரே பாரீர்.

உரை:—உலகத்தினிடமாக, உற்றவர்களும் பெற்றவர்களும் மற்றவர்களும் இருந்தாலும் நம்முடைய தேகத்திற்கு துணையாக மாட்டார்கள். நம்முடைய ஆத்மா; நமக்குத் துணையாகவேண்டும்.

13. கற்றவரொனினும் கருதினும் ஆம்
உற்றவரலரே யுணர்வீர்.

உரை:—வேதசாஸ்திரங்கள் கற்றவர்களைக்கண்டு மனம் கருதினாலும் நம்முடைய தேகத்திற்கு முக்தியைக்கொடுக்க உற்றவர்களல்லர் யென்று உணர்ந்துகொள்வீர்களாகவும்.

14. தேள்கடித்தாற் விஷமிறங்கு மல்லாமல்
கோள்கடித்தாற் வினையிறங்காவாம்.

உரை :—தேள்க்கடித்தால் விஷத்தை இரக்கிப்போடலாம், அல்லாமல் கோள்க் கடித்தவர்களுடைய; வினையென்னும் விஷத்தை யிரக்கமுடியாதாம்.

15. செய்வினை நல்வினை செயவே ஆம்
உய்வினை யெலாம் பற.

உரை :—நாம் செய்வதெல்லாம் நல்வினையைச் செய்வோமானல் ஊழ்வினைகளெல்லாம் வொன்றுகூடி வந்தாலும் பறந்து போகும்.

16. கண்டால் விண்ணப்பம் காணு அலால்
சென்றால் வின்னப்பம் ஆகா.

உரை :—நம்முடைய சிநேகிதர்கள் நம்முடன் கூடியிருக்கும் போது விண்ணப்பித்துடன் முகஸ்துதியாக வார்த்தையாடி நம்மை விட்டுப் பிரிந்த பிறகு அவர்களை வின்னமாகிய வார்த்தையுடன் தூஷணிக்கலாகாது.

17. தெரினர் யெறினர்வரன்ப்
பாரினிற் றெவரின் சிரன்.

உரை :— முக்தியடைந்து மோக்ஷத்தை யேறிப் பார்த்தவர்கள் வரம்பெற்றவர்களாகும். உலகத்தினிடமாக பிர்ம்மத்தைப் போலும் விளங்குவார்கள்.

18. செய் நன்றி யறியாரேவரினும் ஆம்
மெய் நன்றிபுரியா றவர்.

உரை :—வொருவன் செய்த நன்றியையும் அதன் ரகசியத்தையும் அறியாத யெந்தக்குலத்தினருயினும் மெய்யாகிய நன்றியைத் திரும்பச்செய்யமாட்டார்கள்.

19. அறந்தரும் வெய்யோன் றெவரினும் ஆம்
துறந் தவரெனவுங் கூர்.

உரை:—பிரம்மக்கியானத்தை விளங்கச் செய்யக் கூடிய வெய்யோன்யென்னும் சூரியகலையானது யாவருடைய தேகத்திலாவது வலமிடம் சுற்றிவந்தால் அவர்களை துறவியானவர்களென்று சொல்லலாம்.

20. வெய்யவன் கனல் வெகிள ஆங் அனல்
பொய்யுரையார் புந்தி.

உரை:—பொய் சொல்லாதவர்கள் தேகத்தினிடமாய் ஆங்காரமாகிய மூலாக்கினியும் வெய்யோன் யென்னும் சூரியாக்னியும் வெப்பம் குறைந்து வெகுண்டு அமுரத கலசத்தினிடமாய் அமரும்.

21. காய்ந்த மறத்தடியிற் தோய்ந்த மழையதனைப்
பேய்ந்தவான் திறமே உறம்.

உரை:—மறம்பட்டுப் போகும் சமையத்தில் வொரு மழையானது பேய்ந்து அம்மறத்துக்கு உறம் வுண்டாகி துளிற்பதுபோல் அழிந்து போகக்கூடிய தேகத்தினிடமாய் அமுர்தம் பொங்கி வழிந்தால் இளமைப் பருவம் உண்டாகும்.

22. தோய்ந்த பாலதனிற் ஆய்ந்த மக்களிலற்
காய்ந்தபின் காய்ச்சியதே நெய்.

உரை:—பசுவின் பாலைக்காய்ச்சி ஆடையெடுத்து நெய்யாக உருக்கினால் முகம் பாற்கலாம். இதின் ரகசியத்தை யரிந்தவர்களில்லை இது போல் மூலாக்கினியைக் கொண்டும் தேகத்தைக்காய்ச்சி உருக்கினால் வொளி வுண்டாகும்.

23. வாய்ப்பாடும் பட்டு வயறதனிற் சுடுபாடும் பட்டு
தாய்ப்பாடும் பட்டார் தநி.

உரை:—வாய்ப்பேச்சும் அத்து வயருபசியும் அத்து மாய்கையும் அத்துப்போனவர்கள் தனித்தவர்களாக. பிர்மத்தைப் போலிருப்பார்கள். பட்டுயென்பது அத்துப்போனது இத்துப்போனது

24. யேஹாந்தமாகியவர் மோஹாந்தமான உயிற்
சாஹாந்தம் பெற்றதனுல் தான்.

உரை:—யேஹாந்தமாகவும், மோஹாந்தமாகவும் ஆத்மக்கியானத்தையடைந்திருப்பவர்கள் தேகம்முக்தியடைந்தும் மனம் மோக்ஷத்தைப்பெற்றும், சாகாதவரத்தைச் சம்பாதித்துக்கொண்டும் இருப்பார்கள்.

25. வோய்ந்துபோம் காற்று, உடலுயிரை
தோயாமற் றோய்ந்தறிவர் துறவர்.

உரை:—தசவாயுவு வோய்ந்துபோனல் தேகம் அழிந்து போகுமே யென்று பயந்து உடலையும் உயிரையும் வொன்ருக தோய்த்து தன்மனதைக் கொண்டும் தெரிந்துகொள்வார்கள் துறவியானவர்கள்.

26. அழுதுவணங்காதாற் தொழுதின றலற்
பழுதிலா றவரும் அலர்.

உரை:—கடவுளைக்கண்டு வணங்கவேணுமென்ற ஆசையுடன் கடவுளைக் காணுதவரையிலும் தாயினிடம் குழந்தைகள் பாலுக்கழுவது போல் அழுது வணங்காதவர்கள் தொழுதவர்களுமல்ல. தேகமழியாதவர்களுமல்ல.

27. செல்வமுளறறி விலருயின்
அல்லல் வினையகல மாட்டார்.

உரை:—செல்வமுள்ளவர்கள் க்யானமில்லாதவர்களாயின் துக்கமாகிய வினைகள் விலகமாட்டாது

28. காறிடியும் பெய்மழையும்
பாரினிலிலா பாழ்.

உரை:—கருத்தமேகங்களில்லாமலும் இடிமின்னல் இல்லாமலும் மழை பெய்யாமலும் இருந்தால் உலகம் பாழாகிவிடும். தேகத்தினிடமாக மூலாக்னி உச்சிவரையில் முட்டி அமுர்தம் பொழியாவிட்டால் தேகம் அழிந்து போகும்.

29. விண்ணுலகோர் விரும்பினும் மழையை
மண்ணுலகோர் சிலர் மழையில.

உரை:—வானலோகத்திலுள்ளவர்கள் மழை வேணுமென்று விரும்பினாலும் மண்ணுலகத்தினிடமாக மோக்ஷம் பெற்றவர்கள் இல்லாவிட்டால் மழையொரு நாளும் பெய்யாது. உலகமும் செழிக்காது.

30 கண்ணும் கருத்தும் உள்ளவோர் கோன்
நண்ணவும் வினையை நாடிலரூவர்.

உரை:—பிர்மக்யானமென்னும் மூன்று கண்களையும் பெற்று. முக்தி யென்னும் மூன்று சுடரையும் பெற்று தன் தேகத்தையும் தேசத்தையும் ஆளவேணுமென்ற கருத்துள்ள அரசர்கள் பிரருடைய தேகத்தையும் தேசத்தையும் நோதம்படி செய்யார்கள்.

31. வேட்ப்பனின் வாற்தை விரிமலர்மதுவாம்
கேட்ப்பவரின்பாற் கிரு கிரு ஆம்.

உரை:—வேழக்காரர்களுடைய வாற்தையானது விரிந்த புஷ்ப்பத்தினுடைய மதுவைப் போலும் கேழ்க்கக்கூடியவர்கள் மனம் கிரு கிருப்புடன் மயக்கமுண்டாகிவிடுமாம்.

32. வல்வினை தீர்ந்து வரும்வினையைத் தீற்பார்
உள்ளளவும் இன்பம் இலார்.

உரை:—வல்வினையென்னும் பிறவிக்கடலை நீந்திக்கரைசேர்ந்தவர்கள் மற்றுமுள்ளவர்களுடைய வினையை சொஸ்த்தம் செய்வார்கள் அவர்கள் தேகம் உலகத்தினிடம் சஞ்சரிக்கும் வரையில் யாதோரின்பமும் இல்லாதவர்களாம்.

33. அறன் வீட்டின்பம் அறிவிலான் வீடிலான்
பிறவீட்டின்கண் புகுவார்.

உரை:—மோக்ஷவீட்டின் இன்பத்தை யரியாதவர்கள் தேகமென்னும் இடத்தையும் இழந்து தனக்கு குடுத்தபொருளைக்காப்பாற்ற வழிதெரியாமலும் எமனிடம் வொப்பிவிப்பார்கள்.

34. தையலறலவோவையக மாய்கை
பைய்ய ஊழ்வினை நுழை.

உரை :—உலகமுழுமையும் சத்தியாக விளங்கும் தையலர்களென்னும் பெண்களல்லவோ மாய்கைக்கடல். இந்தக்கடல் மனம் புக்குமாகில் ஊழ்வினை யென்னும் துக்கங்களெல்லாம் பைய நுழைந்து மனதை வாட்டும்.

35. ஆத்துமக்கோல் அறியும் அரசற்பாற்
சேத்துமக் கோலின் ஊழ் செல்லாவாம்.

உரை :—ஆத்மாவை அகத்தூமமாகவும் செங்கோலாகவும் அரிய வல்லபமுள்ள அரசர்களிடத்தில் சேத்துமக் கோலென்னும் பகையும் ஊழ்வினையும் வருதாம்.

36. காலை அறிந்து நின்றால் முடியைத்தரும்
வேலை அறிந்து நின்றால் வெற்றிதரும்.

உரை :—வாசிக்காலை அறிந்து மனதை நிலைக்கச் செய்தால் மோக்ஷமென்னும் முடியைத் தரும். வேலென்னும் மூலாக்னியை மனம் அறிந்து நின்றால் உலகமெல்லாம் வெற்றியாகும்.

37. சேலை அவுழ்ந்து நின்றார் மாய்கையிலர்
கோலை நாட்டிநின்றார் குருடறலர்.

உரை :—ஆத்மாவினிடம் மனம் கலந்து பூரணமாகி நிற்கும் காலத்தில் உடுத்தியிருக்கும் கலையானது நிகழ்ந்து நின்றாலும் அதனிடம் மனம்செல்லாது மாய்கையும் இல்லாது, செங்கோலென்னும் வாசிக்கோலை நாட்டி நின்றவர்கள் குருடறல்லர்.

38. பானையுடைந்தாற் றேனையுறிஞ்சாற்
சாணையறியாற் றவமிலர்

உரை :—தேகமழிந்து போனவர்கள் தேனென்னும் அமுர்தத்தைச்சாப்பிடாதவர்களாகும் வொருச்சாண் அளவுள்ள சிரசினுடைய ரகசியத்தை அறியாதவர்கள் தபம் செய்யாதவர்களாகும்.

39. பொழுதெனும் கண்ணே தொழுதிலா றெனினும்
யெழுதிய யெழுத்திற் றென்ன ஆம் பயன்.

உரை:—தனக்குச்சக்தியுள்ள காலத்தில் கடவுளைக்கண்டு மனம் தொழுகவேணுமென்ற ஆசையில்லாதவர்கள் யெந்த வேதங்களைப்படித்தாலும் யெழுதியுள்ள யெழுத்தின் ரகசியம் விளங்காது பயனையும் தருது.

40. வேளையும் மூளையும் விரிபுனலாடக்
காலையும் நூலையும் கருது.

உரை:—சந்திரகலையும் சூரியகலையும் சிரசினிடமாயுள்ள கெங்கையில் ஸ்நாநம் செய்ய வேண்டியதற்கு வாசிக்கலையும் வேதநூல்களையும் மனதைக்கொண்டும் கருதிப்பார்.

41. கூற்றெனும் கூற்றன் குரக்கூற்றன்
யேற்றெனும் யேற்றன் இருளிலர்.

உரை:—கூத்தாடிக் கொண்டிருக்கும் குறைக்காற் றென்னும் சந்திரகலை சூரியகலை மூலாக்னி மூன்றும் வொன்றாகச் சேர்ந்து திருவிளையாடல் செய்வதை சிரசினிடமாக யேறறியவர்கள் மகிமை பொருந்தியும் மனம் இருளடையாமலு மிருப்பார்கள.

42. யேறத்தெரிந்தோ ரிருக்குமிட மறிவாற்
பாறிற் றுணையவற்கு வேண்டார்.

உரை:—மோக்ஷ வீட்டிற்கு யேறிப்போக வழிதெரிந்தோர் பொருளிருக்கும் மிடத்தையும் காண்பார்கள் உலகத்திநிடம் அவர்களுக்கு துணைவேண்டியதில்லை.

43. உறையிலா தவற் தெருவழி நாணாற்
உற்றவ றெனினும் அறிகிலற்.

உரை:—உரையென்னும் பொருள் ரசசியம் அரியாமலும் செத்துபோவோமென்ற,வெட்கம் தெரியாமலும் தேகத்தை நம்பியவர்கள் மனம் நாணமல் தெருவழியாக எல்லாம் செய்வார்கள். சிநேகிதர் வந்தாலும் அறியார்கள்.

44. கொண்டைச் செருக்கும் குமிளம்பழஸ்தனப்
பிண்டம் வொன்றாற் பிரியும்.

உரை:—அழகாகிய கொண்டையும் பிறரை மயங்கச்செய்யக் கூடிய ஸ்தனங்களும் வொரு பிண்டம் வுற்பத்தியாகி வெளியானால் மாய்கையென்னும் முகத்தின் அழகும் மயங்கக் கூடியதனுக்கும் பிரிந்து போகும்.

45. பெண்களின் அழகைப் பெருக்கியே பாற்கிற்
றங்கத்துளே முழுதும் அருவருப்பாம்.

உரை:—மாய்கையாகிய பெண்களின் அழகை மனம் உற்று நோக்கிப் பாற்தால் நவதுவாரங்களும் தேகங்களும் அசுத்தமாகவும் அருவருப்பாகவுமிருக்குமாம்.

46. மன்னர் கைக்கோலும் மறவுரியோர் மனக்கோ
அன்னை யவள் கையிலமரும். [லும்

உரை:—தேசத்தையாளும் மன்னர்கள் பிடிக்கும் செங்கோல் தேகத்திலுள்ள ஆத்மாபிரிந்து போகும் காலத்தில் பூமிதேவியிடம் ஒப்பிவைப்பார்கள். மறவுரியோ றென்னும் மஹா. ரிஷிகள் மறைவாகும் காலத்தில் மனக்கோலென்னும் வாசிக்கோலே. பூமிதேவியிடம் வொப்பிப்பார்கள்.

47. வாணிபம் செய்ய வகையறிவோர் பொருள்
கோணி நிரைந்து குலுங்கும்.

உரை:—உலகமழிந்தாலும் தன் தேகமழியாத வியாபாரத்தைச் செய்யும் வழியைக்கண்டு கொண்டவர்கள் கோணியென்னும் தன் தேகமுழுமையும் பொருள் நிறைந்து காய்த்துக்குலுங்கி நிற்குமாம்.

48. வாணிபம் செய்ய வகையறியார் மனம்
கேணியி லாழ்ந்த கிளி.

உரை:—தேக முக்தியென்னும் தொழிலைச்செய்ய வகையறியாதவர்கள் மனம் மாய்கைக்கடலாகிய. கேணியில் வீழ்ந்திறந்த கிளியைப்போலாகுவார்கள்.

49. காணியை முழுதும் ஆளருணைப் போர் மனம்
பேணிலாதவர் பிழை.

உரை :—பூமி முழுமையும் ஆளவேணுமென்று ஆசையுள்ளவர்கள் மனதை தன்தேகத்தினிடமாக அடக்கி முக்தியடைய வழியறியாத பிழையாகும்.

50. வேகாக்கால் அறிவோர் சாகாத் தலமறிவோர்
போகாரொருநாளும் நறகு.

உரை .—வேகாக்காலாகிய வாசிக்காலையும் சாகாத்தலமாகிய சிரசினுடைய ரகசியத்தையும் கண்டவர்கள் நறஹமென்னும் இருளுக்குப்போகார்

51. பெண் கண்ணியிற் பட்டவர் பக்ஷியாம்
வண்கன்னியற் மாய்கை வலையதாம்.

உரை :—வண்மைவாய்ந்த கன்னியென்னும் பெண்களின் மாய்கைவலையில் அகப்பட்டுக் கொண்டவர்கள் மனமென்னும் பக்ஷியானது முக்திவழியிற்செல்லாவாம்.

52. ஐந்தலைநாகம் அறவிரதள் ஆட்டுவான்
உன் தலை நாகம் உச்சியிலாடும்.

உரை :—ஐந்தலை நாகமென்னும் பஞ்சபூதங்களை மகாவிஷ்ணு ஆட்டுவார் உன் தலைநாகமென்னும் குண்டலிசத்தியானவள் சிரசினிடமாக நிர்த்தனம் செய்வாள்.

53. பெண் கொண்டவற் பித்தனுருவாற்
விண்கொண்டவற் வெறியிலளாவற்.

உரை :—மாய்கையிடம் மனதைச் சம்மந்தப் படுத்தியவர்கள் பையித்தியம் பிடித்தவர்களாவார்கள் கைலாயபதவியை கைவசம் செய்தவர்கள் வெறி யென்னும் கோபமில்லாதவர்களாகும்.

54. செற்றிறந்தார் வெற்றியிலர் மோக
மற்றிருந்தார் புத்தியுளர்

உரை :—ஆத்மாவையும் மனதையும் வொன்று சேர்த்துதேகத்தையழியாமற்செய்து கொண்டவர்கள் மோகமில்லாமலும் பூமியுள்ள

வரையிலும் இருப்பார்கள் செற்றுப் போனவர்கள் உலகத்தை செயித்தவர்களல்ல.

55. முலைப்பாலருந்த முப்பூவும் மலர்ந்ததினல்
மலைப்பாலருந்திஞல் அமுர்தம்.

உரை:—முப்பூவென்ருல் கருக்குழியென்னும் பூவொன்றும் ஸ்த்தனமென்ற பூ இரண்டும் ஆக மூன்றும் மலர்ந்ததினுல் நாம் வுற்பத்தியாகிய தாயினுடைய முலைப்பாலைக்குடித்தோம் மலைப்பாலென்ருல் நம்முடைய மூலாதார புஷ்ப்பம் வொன்றும் சந்திரகலை சூரியகலை யென்ற புஷ்ப்பம் இரண்டும் ஆக மூன்றும் மலர்ந்தால் கெங்கையென்னும் சிற்சத்தியானவள் தேகமழியாத. அமுர்தத்தை ஊட்டுவாள்; கெங்கையென்பவள் சிரசென்னும் மலையிலிருப்பாள்.

56. வேண்டினுற் கின்பம் வெகுண்டாற்கில் பேரின்
தோண்டினு லூறும் கேணி. [பம்

உரை:—பேரின்ப மென்னும் மோக்ஷத்தை விரும்பியவர்களுக்குக் கிடைக்கும்; அதன் அவஸ்தையைக்கண்டு பயந்தவர்களுக்கு கிடைக்காது; வாசிக்கோலைக்கொண்டும் சிரசினிடமாகத் தோண்டினுல் கேணியிலிருந்து அமுர்தம் ஊரும்.

57. கலைநிலத்தோன் கண்டறிவுளோன்
பொருள் நிலத்தையும் பூண்பார்.

உரை:—சந்திரகலை சூரியகலையை தேகத்தினிடம் வசம் செய்தவர்கள் ஆத்மாவைக்கண்டு அறிந்தவர்களாகும் பொருள்வுள்ள நிலமாகிய வொருச்சாண்சிரசையும் அழிவில்லாமல்ச் சொந்தமாக்கிக் கொள்வார்கள்.

58. ஊசிமுனை வாசலுக்குள் வொற்றைக்காலை தூக்கி
வாசிவழி நிற்போற் மாசிலர்.

உரை:—நறஹத்தையும் சொற்கத்தையும் தாண்டி வெட்ட வெளிக்கிப்போகும் பாதையானது ஊசிமுனைதான் கொள்ளுமாம். வொற்றைக்காலென்னும் மூலாக்னியை வாசிக்கரத்தைக் கொண்டும் தூக்கி உச்சிவரையில் வழியைக்காண்போர் இருளிலாதவர்.

59. வொற்றைக்காலை ஊசிமுனைவாசலுக்குள்
யேற்றுமவரே இன்பம்.

உரை:—மூலாக்னியை ஊசிமுனை வழியுள்ள சொற்கவாசலுக்குள் யேற்றுபவர்கள் பேரின்பமடைவார்கள்.

60. கண்டவற் விண்டிலற் அகத்தூமம்
விண்டவற் கண்டிலறுவற்.

உரை:—அகத்தூம மென்னும் மூலாக்னியைக் கண்டவர்கள் மனம் அதை விட்டுப் பிரியாது விண்டு யென்பது பிரிவுவிண்டவர் யென்றால் ஆத்மாவானது தேகத்தை விட்டும் பிரிந்து செத்துப்போனவர்கள் தனக்குள்ளிருந்த பொருள்களை கண்டிலாதவர்களாகும்.

61. நாற்சதுர வீடதனிற் நாயகனின் றுள்போற்றி
மேற்சதுர வீடமற் வர்மேல்.

உரை:—நாற்சதுரமுள்ள பிரம பீடத்தில் நாயகன் யென்னும் மூலாக்னியைக்கண்டு நமஸ்க்கரித்து மேற்சதுறமென்னும் சிரசினிடமாக மோக்ஷ வீட்டைப்பெற்றுக்கொண்டவர்கள் மேன்மையாவார்கள்.

62. வீடுகண்டிலற் கோடுதாங்கிலற்
காடுவாழும் பேய்மனமதாம்.

உரை:—மோக்ஷவீட்டைக்காணுமலும் வாசிக்கோட்டை மூலாதாரத்தில் முட்டிஉச்சிவரையில் தாங்கி நிற்காதவர்களுடைய மனம் மாய்கைவாழும் காட்டிற்குச் செல்லுமாம்.

63. வேலைத்தாங்கினற் காலைவோங்கினற்
மாலைக்கட்டியவறவர் ஆம்.

உரை:—மூலாக்னியென்னும் வேலைத் தாங்கி வாசிக்காலை வோங்கி சிரசினிடம் தெரிசித்தவர்கள் திருமாலென்னும் மூன்றையும் வசம் பண்ணியவர்களாகும்.

64. அறனொருகால் அவளொருகால்
சிவனொருகால் ஆனதே திருக்கால்.

உரை:—சந்திரகலை யொருகாலாகவும் சூரியகலையொரு காலாகவும் மூலாக்னி யொருகாலாகவும் ஆக மூன்றும் திருவடியாச்சுதாம்.

65. ஆடினும் ஆடுவள் பாடினும் பாடுவள்
தேடினும் தேடுவளவளே.

உரை :—உலகத்தையீன்ற தாயாகிய சரஸ்பதியானவள் உலகத்திலுள்ள பிள்ளைகளைகவுனிக்காமல் நிர்தனம் செய்வாள்; சங்கீதம் பாடுவாள் அதிஷ்டமுள்ள பிள்ளைகளைமட்டும்தேடி அமுர்தம் ஊட்டுவாள்; உபதேசமும் செய்வாள்.

66. புறமூன்று மெரித்தவன் சிவன் அவற்குத்
திறனுகி நின்றவன் க்யானி.

உரை :—பிரம்மக்யானிகளின் யெண்சாண் தேகத்தினிடமாக சிவன்யென்னும் மூலாக்கினியைக் கொண்டும் கணபதியானவர் முப்புரம் யென்ற சந்திரபுரம் சூரியபுரம் அக்னிபுரம் மூன்றையும் தகனம்செய்யும் காலத்தில் பிரம்மக்யானிகள் மனதை அகலவிடாமலும் திறமையாகவும் நின்றார்கள்.

67. வேண்டினோர் தன்னைத் தீண்டிலற் பெற்றோர்
தாண்டினோர்க் கெல்லாம் பெற்றோருமே.

உரை :—வாயினால் வேண்டினவர்களை நம்மைப்பெற்றோருகிய பிரம்மா சரஸ்பதி தீண்டமாட்டார்கள். நரஹத்தைத் தாண்டிதன்னிடம்வந்தவர்களை மட்டும் தன் பிள்ளையாக யெடுத்து அமுர்தம் ஊட்டுவார்கள்.

68. கட்டையிற் சொற்கம் கட்டியக்யானிகள் அவர்க்
கெட்டையன் வெட்டிய கேணியினல். [கொரு

உரை :—கட்டை யென்னும் தேகத்தின் சிரசினிடமாய்ச் சொற்கம் கட்டிய க்யானிகளுக்கு நெட்டையன் யென்னும் வாசிஸ்தம்ப மானது அமுர்தக்கேணியை வெட்டிற்று.

69. வொற்றைக்கால் நெட்டையாம் இருகால் குட்
முட்டுக்கால் மூன்றுமவையே. [டையாம்

உரை :—வொற்றைக்காலென்னும் வாசிஸ்தம்பம் நெட்டையாக இருக்கும், சந்திரகலை சூரியகலை யென்னும் இரண்டுகாலும் குட்டையாகயிருக்கும் இந்தமூன்று காலும் தேகத்தினிடமாய் முட்டி நிற்கவேணுமாம்.

70. இருளிலான் பொருளுளான் யென்றைக் குமழி
அருளுடையோரின் அன்பால். [விலான்

உரை :—அருளுடையோரென்னும் குருதீக்ஷையின் அன்பால் மனமிருளிலாதவர்கள். தேகம் வொரு நாளும் அழியாது சொந்தமாகயிருக்கும்.

71. மனமுருகி நின்றால் மதமொடுங்கி நிற்கும்
குணமுடைய ரூவருமவரே.

உரை :—தேகம் அழிந்து போகுமே யென்ற பயத்துடன் மனம் உருகிக்கடவுளை வணங்கியவர்களுக்கு ஆங்காரமென்னும் மதமானது வொடுங்கிப்பயப்படுமாம்; அவர்களைக்குணமுள்ள சாதுக்களென்றும் சொல்லு.

72. மதமூன்று மில்லாற் பதம் பெறுவர் அறனடி
றகமுழுது மிருளிலையாமவற்கு [யாற்

உரை :—மதமாச்சரியம் கோபமில்லாத தேகம் பதமென்னும் முக்தியடையும் சிவனடியையும் மனம் பாற்கும் அகமென்னும் மனமும் இருளடையாது.

73. நோன்புளற் கோபம் நுண்ணிய ஆக்கை
சாண்புனல் அறியா அழுக்கு.

உரை :—சொர்க்கம் வேணுமென்று நோன்புள்ளவர்களுக்கு கோபம் உண்டானல் தேகத்தின் வம்சமாகும் அவர்கள் மனம் சாண் புனல்யென்னும் சிரசினிடமாயுள்ள கெங்கையின் ரகசியம் அரியாத அழுக்குள்ளதாகும்.

74. அறிவிலார் தமக்கு அருள் உபதேசம்
பழுதையின் பாம்பேயாம்.

உரை :—அறிவில்லாதவர்களுக்கு மோக்ஷவீட்டின் உபதேசத்தைச்செய்தால் வைக்கற்பழுதையாக நினைப்பார்களே தவிர விழமுள்ளபாம்பாக நினையார்கள்.

75. கெருவமுளன் கெடுநற கன்னிருளன்
வொருவருமே தீண்டாறவனே.

உரை:—கெருவத்தை யடைந்தவர்கள் நறகத்திற்குப் போவார்கள். அவர்கள் மனம் இருளடைந்திருக்கும் வொருவரும் அவனைத் தீண்ட மாட்டார்கள்.

76. சுட்டிக்கால்முட்டி சுழிக்கால் யேறும் விதம்
குட்டிக் கண்ணுளதே பாற்க.

உரை:—சுட்டிக்கால் யென்னும் மூலாக்னியும் சுழிக்காலென்னும் வாசிஸ்தம்பமும் மூலாதாரத்தில் நின்றும் உச்சிவரையில் முட்டி நிற்கக்கூடிய ரகசியத்தை குட்டிக்கண்யென்னும் மனக்கண்பாற்குமாம்.

77. மூன்றரும்பு பூத்தவரும் முழுவயிரம் பாய்ந்தவரும்
சாண்டருமின்பம் காண்பார்.

உரை:—மூன்றரும்புயென்னும் மூலாதாரபுஷ்பம் வொன்றும் சந்திரகலையென்னும் புஷ்பம் வொன்றும் சூரியகலையென்னும் புஷ்பம்வொன்றும் ஆக மூன்றுபுஷ்பமும் மலர்ந்தவர்கள் தேகம் முழுவதும் வைரம்பாய்ந்தும் சிரசினுடைய இன்பமும் காண்பார்கள்.

78. ஆறுமுகமும் வொருமுகமாய் அமைக்க வல்லார்
ஊரும் அமுர்தம் உண்பார்.

உரை:—ஆறுமுகமென்னும் ஆராதாரத்தை வொருமுகமாகச் சேர்க்கவல்லமையுடையவர்கள் சிரசினிடமாய் ஊரும் அமுர்தத்தை யுண்பார்கள்.

79. உச்சிக்குழியில் வொழுகும் தேனமிர்தம்
மச்சுக்குள்ளிருந் தருந்துவர்.

உரை:—சிரசின் உச்சிக்குழியில் வொழுகும் மதுவென்னும் அமுர்தத்தை மறைவாக யிருந்து க்யானிகள் சாப்பிட்டு களைதீருவார்கள்.

80. முட்டினுன் முட்டி முடிகொண்டான் கிட்டி
யெட்டினுன் இறைவனின்பால்.

உரை :—முடிகொண்டான் யென்னும் சிரசின் உச்சியில் மூலாக்னியைக் கிட்டிக்கொண்டுபோய் முட்டி மூலாதாரத்திற்கும் உச்சந்தலேக்கும் ஸ்த்தம்பமாக நிறுத்திவைத்தவன் கடவுளேக் கண்டவனுகும்; ரகசியம் பேசியவனும் ஆகுவான்.

81 மூச்சொடுக்கி ஆத்துமத்தை முட்டவிட்டோர்
பேச்சொடுக்கி நிற்பார் பெரியோர்.

உரை :—சுவாசத்தை அடக்கி மூலாக்கினியை உச்சிவரையில் முட்டவிட்டோர் அதிகமாகப் பேசாமலும் ஸ்த்தம்பத்தைப் போலும் மிருப்பார்கள்; தூங்காமல் தூங்கிக்கொண்டு மிருப்பார்கள்.

82. மூச்சுவிடார் வுடலே வுயிர்காக்கும்
மூச்சுவிட்டோ ருயிரை யெமன் காற்பான்.

உரை :—சுவாசத்தை வெளியில் விடாதவர்களுடைய தேகத்தை ஆத்துமாவானது அழியாமல் காக்கும்; சுவாசத்தை வெளியில் விட்டவர்களுடைய உயிரை யெமன்கொண்டுபோவான்; உடலழிந்து போகும்.

83. கன்னியின் மோகம் அறமுண்ணியன் போகம்
நண்ணிய வினையிலாற்குண்டு.

உரை :—இந்திராணியின் மோகத்தை முக்தியடைந்து மோக்ஷம் பெற்ற ஆத்மாவானது போகம் செய்யுமாம்; அதன் றகசியம் பாப வினையைச் செய்யமனமில்லாதவர்களுக்கு கண்ணுடியில் பார்ப்பது போல் பார்க்க தெரியும்.

84. நூலேணிமேலேறி நுட்பமால் நிற்போர்க்கு
கோலேணி வேண்டிலரே குரு.

உரை :—வாசிநூலேக்கொண்டும் யேணிசமைத்து மெல்லினமாக நறஹத்திற்கும் சொற்கத்திற்கும் நாட்டியவர்களுக்கு மறத்தினுற் செய்த யேணி வேண்டியதில்லே ; உலகத்திற்கு குருவாகவும் விளங்குவார்கள்.

85. வொற்றைக்காலில் ஆடிய சிவனுர்
மற்றுங்கால் யேன் தூக்கவில்லை.

உரை:—சந்திரகலை சூரியகலையானது வொரு மூகூர்த்த காலத்திற்கு வொவ்வொருகாலைத்தூக்கி யேன்நிர்த்தனம் செய்யக் கூடாது.

86. கண்டதாரை ஊதிகண்டவர்கள் நாதவிந்தை
உண்டவர்கள் அமுரிபுளி அமுர்தம்.

உரை:—உண்ணுக்கு மலற்ந்து சிரசின் உச்சிவரையில் கண்ட தாரையாக ஊதுகின்ற சிவருஜயோஹிகள் நாதவிந்தென்னும் சந்திர கலையையும் சூரிய கலையையும் தெரிசிப்பார்கள். அமுரிபுளி யென்னும் மூலாக்னியையும் கெங்கையையும் வொன்றசேற்து கல்பமாகச் செய்து அமுர்தபானம் பண்ணுவார்கள்.

87. மூலாதாரன் முழுவயான் சப்பாணி
யேலாதவன் யெழுந்திரான்.

உரை:—கணபதி யென்னும் மூலாக்னியை மாயாசத்தியானவள் கைலாயத்திற்குப் போகவிடாமல் சப்பாணிக்காலாகவும் வயற்றைப் பெரிதாகவும் செய்து விட்டாள்.

88. யேலாதவனை யெழுந்தருளச் செய்குமவர்
வாலீபம் மென்னும் வளம்பெருவர்.

உரை:—கைல்ாயத்திற்குப் போகவிடாமலும் யெழுந்தருள யேலாமலும் செய்திருக்கும் மாயாசத்தியை ஜெபித்து கணபதியை கைலாயத்திற்கு கொண்டு போனவர்கள் யென்னும் பதினுருக இருப்பார்கள்.

89. சுவாதிஷ்டானம் சுழிமுதலரிந்தோர்
ஆதிபஹவனும் பிர்ம்மா.

உரை:—சுவாதிஷ்டானம் யென்னும் அடிவயற்றின் ரகசியத்தை அறிந்தவர்கள் ஆதியென்னும் சத்தியாகவும் பஹவன் யென்னும் சிவமாகவும் பிர்ம்மமாகவும் விளங்குவார்கள்.

90. ஆதிசரஸ்பதி அருளளிப்பாள்
சோதி விளக்கையும் தருவாள்.

உரை :—ஆதித்தாயாகிய சரஸ்பதியைக் கண்டவர்களுக்கு அருள் யென்னும் க்யானத்தையும் சோதிவிளக்கென்னும் முக்தியையும் கொடுப்பாள்.

91. மணிபூரகமெனும் மஹாவிஷ்ணுவானவர்
கோணிநி மிறக்குலுக்குவர்.

உரை :—மணிபூரகமெனும் தொப்புளில் அமர்ந்திருக்கும் மஹாவிஷ்ணு வயறு நிறையும்படியாகச் சாப்பாட்டைக் கொடுத்து குலுங்க நகைப்பார்.

92. மாயா லெஷ்சுமி வடிவெனும் அழகி
வோயாவேலை வொருவிடம் நிலையாள்.

உரை :—மாயாலெக்ஷ்சுமி யென்பவள் அழகாக யிருப்பாள்; அவள் மனம் வோரிடத்திலும் தரிப்பாடாகாது; கொடுக்கிறதும் கெடுக்கிறதுமாக யிருப்பாள்.

93. அனாகதத்தில் அமர்ந்திருக்கும் ருத்திரன்
கணகணவென்றும் தீயைக் கொளுத்துவர்

உரை :—அனாகதமென்னும் நெஞ்சக்குழியில் அமர்ந்திருக்கும் ருத்திரன் கோபாக்னியையும் பசியையும் உண்டாக்குவார்.

94 தீச்சுடராகிய ருத்திரியாம் பெண்
ஆச்சுது ஆச்சுது கொடு கொடு வென்பாள்.

உரை :—தீச்சுடரென்னும் ருத்ரியென்பவள் சாப்பிடும் வஸ்துவை செரிமானம் செய்து மருபடியும் தரும்படியாகக் கேட்பாள்.

95 விசுத்தியாமய்யன் அவர்முகம் ஆராம்.
கழுத்தினிலணியும் ருத்துருக்ஷம்.

உரை :—விசுத்தியென்னும் தொண்டைக்குழியில் அமர்ந்திருக்கும் மயேஸ்பரனுக்கு முகம் ஆறாகும்; அதற்குச் சாட்சியாகக் கழுத்தில் ஆருமுகருத்துருக்ஷத்தைக் கட்டிக்கொள்வார்கள்.

96. மயேஸ்பரியாம் பெண் வெள்ளியாய் வந்தவள்
காயஸிதிரி ஜெபம் கணிப்பாள்.

உரை:—மயேஸ்பரி யென்னும் சத்தியானவள் உலகத்திற்கு விடிவெள்ளியாகவும் தேகத்திற்கு ஞானசத்தி யாகவும் காயஸ்திரி ஜெபமென்னும் மோக்ஷஜெபத்தையும் கணிப்பாள்.

97. ஆக்ஞையாகிய சதாசிவமதரும்
வாய்க்கெளிதாகிய மூச்சே.

உரை:—ஆக்ஞை என்னும் நெற்றிக்கண்ணிடமிருக்கும்சதா சிவமாகிய சுவாசத்தை உலகத்தார்கள் மூச்சு வந்ததென்றும் மூச்சு போய் விட்டதென்றும் சீவன்போய் விட்டதென்றும் வாய்க்கெளி தாகச் சொல்வார்கள்.

98. தாய்யெனும் மனோன்மணி சேய்தனையன்பாய்
வாயிலா மொழிகளா லருள்வாள்.

உரை:—உலகத்திற்குத் தாயாகிய மனோன்மணியானவள் ஞானப்பிரகாசமுள்ள பிள்ளைகளுக்கு வாயினற் வுபதேசம் செய்யாமல் பலவிதமான சாட்சிகளாக தெரிசிக்கும்படி செய்வாள்.

99. உச்சியிற் கெங்கை உத்தமிப் பெண்ணுமவள
பற்றுவர் பசியிலாதவர் [ருள்

உரை:—சிரசின்உச்சியில்இருக்கும் கெங்கையென்னும் பத்மினிப்பெண்ணைக்கண்டு அவளுடைய அருளைப்பெற்றுக்கொண்டவர்களுக்கு பசியில்லாத அமுர்தத்தை கொடுப்பாள்.

100. குண்டலிசத்தி கொடிய மாய்கையாள்
விண்ணவர் யாவரும் வெருள்வர்.

உரை:—முச்சந்தியில் வீற்றிருக்கும் மூலப்பொருளாகிய குண்டலிசத்தியமென்னும் மாயாசத்தியைக்கண்டால் பூலோகத்தார்களும் வானலோகத்தார்களும் பிற்ம லோகத்தார்களும் மயங்கி தேகம் [illegible] தன்னையரியாமல் பிற்மித்து நிற்பார்கள்.

ஒன்றும் இரண்டும் வொன்றுனல்
உலகமனைத்தும் ஆள்வாய்

முற்றுகை.

நாலுலோகம்.

SCANNED